சமஸ்தான காங்கிரஸ், சமஸ்தான பொதுமக்கள் காங்கிரஸ், விவசாயிகள் காங்கிரஸ் இவைகள் தத்தம் பிரதிநிதிகளை டில்லிக்கு அனுப்பினார்கள். மன்னர் பிரானின் பிரதிநிதிகளாகச் சென்ற ஸ்ரீமான் V. பாலகிருஷ்ணன் சேர்வைகாரர் அவர்களும், ஸ்டேட் வக்கில்—பப்ளிக் பிராஸிக்யூடரும் 2-ம் தேதியன்று டில்லிபோய்ச் சேர்ந்தார்கள். டிஸம்பர் 3-ம் தேதியன்று தனித்தனியாக எல்லாப்பிரதிநிதிகளும் ஸ்ரீமான் V. P. மேனன் அவர்களைச் சந்தித்தார்கள். சமஸ்தான காங்கிரஸின் பிரதிநிதிகளாக ஸ்ரீமான்கள் V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள், M. A., B. L., K. முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள், B. A., B. L. P. V. Rm. பழனியப்ப செட்டியார் அவர்கள், ராம ஸ்ரீனிவாஸன் அவர்கள், A. S. முத்துகிருஷ்ணய்யர் அவர்கள், நாராயணஸாமி ரவுத் அவர்களும், சமஸ்தான பொதுமக்கள் காங்கிரஸுக்கு ஸ்ரீமான் R. வெங்கட்ராம சர்மா, B. A., B. L., அவர்களும், விவசாயிகள் காங்கிரஸுக்கு ஸ்ரீமான் ராமஸ்வாமி சேர்வை, B. A., அவர்களும் சென்றார்கள். புதுக்கோட்டையிலிருந்து சென்றிருந்தவர்கள் எல்லோர்களிடங்கிய ஓர் மகாநாடு 4-ம் தேதி நடைபெற்றது. கனம் சர்தார் படேல் பிரதிநிதிகள் தெரிவித்த விஷயங்களை ஆலோசித்து ஓர் முடிவான அபிப்பிராயத்திற்கு வந்து விட்டதாகவும் அதை மன்னர்பிரானுக்கு தந்திமூலம் தெரிவிப்பதாகவும் மகாநாட்டில் ஸ்ரீமான் V. P. மேனன் அவர்கள் தெரிவித்தார்கள். மன்னர் பிரான் இதை ஒத்துக்கொண்டதாக தகவல் கிடைத்தமேல் ஓர் உத்தியோகஸ்தரை திவானாக நியமிக்க ஏற்பாடு செய்வதாயும் தெரிவித்தார்கள்.

இவ்விஷயத்தில் வெகு சீக்கிரத்தில் மன்னர் பிரான் ஓர் பிரகடனம் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * * * *

ஸ்ரீமான் V. ஷண்முகம் செட்டியார் தன் முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிட்டார். மன்னர் பிரான் 19—11—47-ல் அவருடைய ராஜினாமாவை அங்கீகரித்து டில்லி ஆலோசனையின் முடிவை எதிர்பார்த்து அதுவரை அந்த ஸ்தானம் காலியாகயிருக்குமென்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

* * * * *

நடந்த இரண்டு உலக மகாயுத்தங்களையும் நினைவுறுத்த நவம்பர்மீ 9-ம் தேதி 11-மணியிலிருந்து (ரயில்வே மணிப்படி) இரண்டு நிமிஷநேரங்களுக்கு மௌனத்தின் மூலம் ஞாபகார்த்த தினம் கொண்டாடப்பட்டது.

சமஸ்தானத்தில் போதை வஸ்துக்கள் சம்பந்தமான கள்ளத்தனத்தை ஒழிக்க ஸ்ரீமான் M. நாராயணசாமி பிள்ளையை கலால் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

* * * * *

கெஜெட் பதிவில்லாத கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் மகா சபைக்கூட்டம் ஒன்று நவம்பர் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3-மணிக்கு தலைநகர் டவுன்-பாங்க் வாசகசாலையில் கூடிற்று. சுமார் 200 அங்கத்தினர்கள் அதில் கலந்து கொண்டனர். அவர்கள், குமாஸ்தாக்களுக்கு ஆரம்பச்சம்பளத்தை ரூ 40 ஆக உயர்த்தவேண்டுமென்றும் ரூ 100-ம் அதற்குக் கீழ்ப்பட்ட சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கு கிராக்கி அலவன்ஸை ரூ 15 ஆக உயர்த்தவேண்டுமென்றும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கும்படிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

* * * * *

கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் டிஸம்பர்மீ 5-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று 28--11—47 நடந்த மகா சபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களையொத்து உடனேயே சம்பளம் வகையாக்களைப் புனராலோசனை செய்யவேண்டுமாய் மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரானிடம் ஓர் விண்ணப்பம் மூலம் தெரிவித்தனர். அவர்கள் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்ய தங்கள் சங்க மெம்பர்களையும் கொண்ட ஓர் பரிசீலனைக் கமிட்டியை நியமிக்கும்படியும் கோரினார்கள். மன்னர்பிரான் ரூ 55-ம் அதற்குக் கீழாகவும் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் ரூ 5 சம்பளத்தைக் கூட்டியும் கிராக்கி அலவன்ஸை ரூ 7-லிருந்து ரூ 10 ஆகச்செய்தும் மொத்தம் சம்பளததையும் கிராக்கி அலவன்ஸையும் சேர்த்தால் ரூ 70 வரை வாங்கலாமென்றும், இந்த உத்திரவு 1—12—47 முதல் அமுலுக்கு வருமென்றும் களிகூர்ந்து உத்திரவிட்டிருக்கிறார்கள். தவிர ஓர் அக்கிராஸனரும், இரண்டு உத்தியோகஸ்தரும், இரண்டு உத்தியோகப் பற்றற்றவரும், இரண்டு சங்க அங்கத்தினர்களும் கொண்ட ஓர் கமிட்டியை நியமித்து இவ்விஷயத்தில் பரிசீலனை செய்து அறிக்கை விடும்படி செய்யப் படுமென்றும் சொல்லியுள்ளார்கள். யுத்தகாலத்திலும் அதற்குப்பின்னும் சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் ராஜ விஸ்வாசத்துடன் திறம்பட உழைத்ததுபற்றி தர்பாரில் மெச்சப்பட்டிருக்கிறது.

தலைநகர் நகர சபையின் II, V, VI, X வார்டுகளின் தேர்தலுக்குப் போட்டியின்றி கீழே குறிப்பிட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(1) ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸராகவ அய்யங்கார்.
(2) ஸ்ரீ R. ரெங்கஸாமி அய்யங்கார்.
(3) ஸ்ரீ சிவானந்தம் பிள்ளை.
(4) ஸ்ரீ பழனியாண்டி பிள்ளை.

* * * *

சமஸ்தானத்திலுள்ள சர்க்கார் சேவகர்கள் ஓர் சங்கத்தை நிறுவியிருக்கிறார்கள். டிஸம்பர் 12-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று நடந்த மகா சபைக் கூட்டத்தில் நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து விதிகளும் நிறைவேறியது. சென்னை அரசாங்கம் புதிதாக அமைக்கப்போகும் சேவகர்கள் சம்பளத்திட்டத்தை அறிந்துகொண்டு தங்கள் கோரிக்கையை ஈ-தர்பார் அவர்களுக்கு தீர்மானம் மூலம் தெரிவித்துக்கொள்வதென்று முடிவு செய்தனர். ஸ்ரீமான் வி. சு. திருநாவுக்கரசு செட்டியார் இச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * * *

அதே மாலையில் சமஸ்தான கிராம உத்தியோகஸ்தர்கள் ஓர் சங்கத்தை நிறுவ தலைநகர் டவுன் பாங்க் வாசகசாலையில் கூடினார்கள். சுமார் 200 பேர்கள் வந்திருந்தனர். தாத்காலிகமாக நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து விதிகளை அமைக்க ஓர் கமிட்டியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தங்கள் சம்பளம் வகையரா விஷயமாக கொடுத்த மனுக்களின் பேரில் சீக்கிரத்தில் உத்திரவு செய்ய ஈ-தர்பார் அவர்களை வேண்டிக்கொள்வதாய் ஓர் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

* * * *

ரூபாய் 25-ம் அதற்குக் கீழ்ப்பட்டும் உபகாரச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 3—8—0 வீதம் கிராக்கி அலவன்ஸ் கொடுத்துள்ளார்கள். இந்த உத்திரவு 1—7—47 முதலே அன்வயிக்குமென்றும் கூறியுள்ளார்கள்.

தமிழ் பகுதி

மாட்சி தங்கிய
ஸ்ரீ-பிரஹதம்பா தாஸ் ராஜா ராஜகோபாலத் தொண்டைமான்
பஹதூர் அவர்கள் விடுத்த
பிரகடனம்.

1947-ம் ௵ நவம்பர் ௴ 16 ௳

சென்ற செப்டம்பர் ௴ 27-ம் தேதியன்று நான் விடுத்த பிரகடனத்தில் ஸமஸ்தானத்தில் பூர்ண பொறுப்பாட்சியை ஏற்படுத்த எனக்கு உத்தேசம் என்று வெளியிட்டு, அதில் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபையின் அமைப்பையும் புதிய அரசியலை வகுக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளையும் குறிப்பிட்டிருப்பதாலும்;

ஸமஸ்தான காங்கிரஸும், மற்ற பொதுஜன சங்கங்களும், தனிப்பட்ட நபர்களும் பிரகடனத்தில் திருத்தப்படவேண்டிய அம்சங்களைப் பற்றி என்னிடம் யோசனைகள் கூறியிருப்பதனாலும்;

பொதுஜன விருப்பத்துக்கொத்ததாகவும் பொதுஜன நலனுக்கு மிகவும் சாதகமளிக்கக்கூடியதாகவும் உள்ள ஒரு அரசியலை வழங்குவது எப்பொழுதும் என்னுடைய விருப்பமாக இருந்து வந்திருப்பதாலும்;

நவம்பர் ௴ 14-ம் தேதியன்று பல்வேறு பொதுஜன சங்கங்களின் மகாநாட்டை நான் கூட்டி சமஸ்தானத்திற்கான அரசியல் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக அவைகளின் யோசனைகளைக் கேட்டிருப்பதாலும்;

என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்களை நான் நன்கு பரிசீலனை செய்த பின் செப்டம்பர் ௴ 27-ம் தேதி விடுத்த பிரகடனத்திற்கு ஓரளவு மாறுதலாக ஒரு பிரகடனத்தை வெளியிடுவது விரும்பத்தக்கதென்று நான் கருதுகிறபடியாலும்;

நான் இதன் மூலம் பின் வருமாறு கட்டளையிடுகிறேன்.

(i) அரசியல் நிர்ணய சபை பூர்ணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அதில் ஸமஸ்தானத்தின் ஜனத்தொகையில் 7,500-க்கு ஒரு அங்கத்தினர் வீதம் வயதுவந்தவர்களுக்கு வோட்டுரிமை அளிப்பது என்ற அடிப்படையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 60 அங்கத்தினர்கள் இருக்கவேண்டும்.

(ii) அரசியல் நிர்ணய சபை 1948-ஆம் ஜூன் மாதம் 1-ம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின் சீக்கிரமாகவோ கூடவேண்டும். அக்காரியத்திற்காக வாக்காளர் ஜாபிதாவைத் தயாரிப்பதும் அதற்கான மற்ற நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படும்.

(iii) அரசியல் நிர்ணய சபை அதன் அக்கிராசனரைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

(iv) தேவஸ்தானங்களும் சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதும் ஒதுக்கப்பட்ட விஷயங்களாகயிருக்கவேண்டுமா அல்லது இல்லையா என்பதை அரசியல் நிர்ணய சபை நிர்ணயிக்கும்.

2. பிரகிருதம் உள்ள சட்ட நிர்மாண சபையைக் கலைத்து விடுவது, இடைக்கால சர்க்காரை அமைப்பது என்ற பிரச்னையைப் பற்றி, அபிப்ராய பேதம் பிரமாதமாக இருந்து வருகிறது. சிலர் உடனடியாகவே அதைக் கலைத்து விடுவதை ஆதரிக்கிறார்கள். மற்றும் அநேகர் பழைய அமைப்பையே தொடர்ந்து வைத்திருக்கலாம் என்கிறார்கள் இந்த விஷயத்தை திருப்திகரமாக சரிப்படுத்திவிடலாமென்று நான் நம்புகிறேன். இவ்விஷயம் என் கவனத்திலிருந்து வருகிறது. இப்பிரச்னை விஷயமாக என்னுடைய முடிவைக் கூறி மற்றொரு பிரகடனத்தை வெகு சீக்கிரத்தில் நான் விடுவதாக உத்தேசிக்கிறேன்.

3. இந்த பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு விஷயங்களைப் பற்றி என்னிடம் அவர்களுடைய அபிப்பிராயங்களை தெரிவித்த பல்வேறு தனிப்பட்ட கனவான்களிடமிருந்தும் பொதுஜன சங்கங்களிடமிருந்தும் எனக்கு கிடைத்துள்ள ஒத்தாசையை மனமாரப்பாராட்டுவதாக நான் கூற விரும்புகிறேன். நான் வெளியிட்டிருக்கும் சீர்திருத்தங்கள் தாராள மனப்பான்மையுடனும், பரந்த நோக்கத்துடனும், புதுக்கோட்டை மக்களின் க்ஷேமத்தை மேன்பாடு செய்வதைத் தவிர மற்ற யாதொரு நோக்கமல்லாமலும் கையாளப்படுமென்று நான் நம்புகிறேன்.

"சமஸ்தான உணவு நிலைமை."

(1947-ம் வருஷம் அக்டோபர்மீ இரண்டாவது பக்ஷத்தியது.)

I

1. சீதோஷ்ண ஸ்திதியும் பயிர் நிலையும் ... மாறுதல் இல்லை.

2. தானிய இருப்பு வகையரு ... ,,
ஆனால் மாதாந்திர கோட்டாவை 1947-ம்வரு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 500 டன்களாக மாற்றப்பட்டிருந்தது, 1947-ம்வரு அக்டோபர் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டு விட்டது.

3. விலை விபரம் ....
4. சேகரிப்பும், மேற்பார்வையும், சேமித்துவைத்தலும்.
5. போக்குவரத்து ...
6 பங்கீடும் ஊண்சத்தும் ...
7. உணவுப் பதார்த்தங்கள் செய்யப்படும் எண்ணெயும், எண்ணெய் வித்துக்களும் புண்ணாக்குகளும்.

(3–7) ,,

8. பொதுவான விஷயங்கள் :—பிரஸ்தாப பக்ஷத்திற்கு முந்திய 4 வாரத்தின் கணக்கு விகிதத்தின்படி அரிசிக் கையிருப்பு இன்னும் 8 வாரத்திய பங்கீட்டிற்கு போதுமானது.

II

(1947-ம்வரு நவம்பர்மீ முதல் பக்ஷத்தியது.)

1. சீதோஷ்ண ஸ்திதியும் பயிர் நிலையும் ... மாறுதல் இல்லை.

2. தானிய இருப்பு வகையரு :—உணவுப் பொருள்களை வெற்றிகரமாகச் சேகரிக்க ஒரு சேகரிப்பு உத்தியோகஸ்தர் சமீபத்தில் நியமிக்கப்பட்டிருப்பதையும், மொத்த வியாபாரிகளிடம் கையிருப்பு அநேகமாகக் குறைந்துவிட்டதையும் தவிர அதிக மாறுதல்கள் இல்லை. மதருஸ் கவர்ன்மெண்டாரால் உடனேயே உணவுப் பொருள்கள் அனுப்பப்படாவிடில், பங்கீட்டு முறை முறிந்து பட்டினிக்கு ஆளாவது நிச்சயம்.

3.	விலை விடரம் ...	மாறுதல் இல்லை.
4.	சேகரிப்பும், மேற்பார்வையும், சேமித்துவைத்தலும்.	
5.	போக்குவரத்து ...	

6. பங்கீடும் ஊண் சத்தும் :—15—3—46வ முதல் உணவுப் பங்கீடு சமஸ்தானத்தில் அமுலிலிருந்து இதுவரை வெற்றிகரமாய் நடந்து வருவதில் மதருஸ் கவர்ன்மெண்டார் நடப்பு பங்கீட்டு வார முடிவுக்குள் போதிய உணவுத் தானியங்கள் கொடுத்து உதவாவிடில் பங்கீட்டு முறை நிச்சியமாக முறிந்துவிடும் என்பதைத் தவிர வேறு மாறுதல் இல்லை.

7. உணவுப் பதார்த்தங்கள் செய்யும் எண்ணெயும், எண்ணெய் வித்துக்களும் புண்ணாக்குகளும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஒன்றும் இல்லை.

8. பொதுவான விஷயங்கள் :—பிரஸ்தாப பக்ஷத்திற்கு முக்கிய நான்கு வார கணக்கு விகிதப்படி அரிசி கையிருப்பு இப் பக்ஷத்தின் கடைசியில் 6 வார பங்கீட்டிற்கு போதுமானது. மொத்த வியாபாரிகளிடம் இருப்புக் குறைந்துவிட்டது. அதனால் இந்தப் பிராந்திய உணவு அதிகாரியும், மதருஸ் கவர்ன்மெண்டாரும் உடன் காலத்தில் உதவி அளிக்காவிடில், உணவுப் பங்கீட்டு முறை முறியும் தருணத்திலிருக்கிறது.

இப்பால் மதருஸ் கவர்ன்மெண்டார் கனிகூர்ந்து 200 டன் அரிசியை நவம்பர் மாதத்திற்கும் 400 டன் அரிசியை டிஸம்பர் மாதத்திற்கும் அனுப்ப ஒதுக்கியிருக்கிறார்கள்.

பால், பூரணமான உணவு.

(G. துரைசாமி அய்யங்கார்).

பாலில், எல்லாவகை உணவு சத்துக்களுமிருப்பதால், அது, ஒரு பூரணமான உணவு. அதில், சற்று ஏறக்குறைய, நமக்கு இருக்கவேண்டிய அளவில் உணவு சத்துக்கள் இருக்கின்றன. ஆகலால் பால், குழந்தைகளுக்கும், வயது வந்தவர்களுக்கும் சிறந்த உணவு என்பதை யாவரும் அறியவேண்டும்.

நமக்கு அவசியமான சுதையம் (Calcium) என்ற சத்து பாலில் போதுமான அளவு இருக்கிறது. முழுப்பாலானாலும் சரி, கட்டிப்பால், பொடி, தயிர், மோர், முதலியதானாலும் சரி, சுதையம் தகுந்த அளவில் இருக்கின்றன. இது நமது உடல் நிறையில் 100-க்கு இரண்டு பாகமாகும் மற்ற கனியங்களுடன் ஒப்பிட்டு பார்த்தால், அதிகம் தான் என்று சொல்லவேண்டும். எலும்புகள் பற்கள் இவைகளில் இது பெரும்பாலும் இருக்கிறது. குழந்தைகள், வளர்ச்சியடைய வேண்டியபடியால் அவர்களுக்கு போதுமான அளவு கொடுக்கவேண்டும். கர்ப ஸ்திரீகளும் தகுந்த அளவு உட்கொள்ளவேண்டும்.

இன்னும் நமது இரத்தத்திற்கு உரையும் தன்மையைக் கொடுக்க சுதயம் முக்கிய காரணமாகும். அது இல்லாவிட்டால், நமது உடம்பு காயம்பட்டு இரத்தம் வரத்தொடங்கிவிட்டால், பிறகு விடாமல் வந்து கொண்டே இருக்கும். அதனால் கெடுதல் ஏற்படக்கூடும். சுதையமிருப்பதினால், ரத்தம் உரைந்து போவதால் காயத்தின் மூலம் ஜாஸ்தி ரத்தம் வெளிப்படாமல் தடைபடுகிறது. உடம்பிலுள்ள இதர கனியங்கள், அவைகளின் வேலையைச் செய்ய சுண்ணும்பு அல்லது சுதையம் அவசியமானது. எலும்பு அமைப்புக்கு இன்றியமையாத காரியத்திற்கு சுதையம் தேவையானது. இவை இரண்டும் பாலில், தகுந்த அளவு இருப்பதால், பால் சிறந்த உணவு. இந்த இரண்டு கனியங்களும் உடம்பில் தகுந்த அளவு இல்லாமல் போனால் நரம்பு பலஹீனம், பல் சொத்தை, சதை வலி, எடை குறைவு, களைப்பு முதலிய கெடுதல்கள் காணப்படுகின்றன. மேல் சொன்னதுடன், பாலில், இரும்பு, செம்பு, மங்கனம் என்ற கனியங்களும் இருக்கின்றன. ஆனால் பாலில், நமக்கு வேண்டிய அளவு இல்லை. இருந்தபோதிலும் இவைகளை, தான்யங்கள், பழங்கள், காய்கறி சாப்பிடுவதினால், உடம்பிற்கு தேவையுள்ளதை கிரகித்துக் கொள்ளலாம். கொய்யா, தக்காளி, கீரை, பச்சை காய்கறிகள் இவைகளும் இதற்கு பெயர் போனது.

தேக வளர்ச்சிக்கு அவசியமானதும், தேக ஆரோக்கியத்தை கொடுக்க காரணமாயிருக்கிற விடமின் (ஜீவசத்துக்களும்) பாலில் இருக்கின்றன. இன்னும் புரோடீன் சத்துமிருக்கிறது. ஆகையால், பால் பூர்ணமான ஆகாரமென்பது விளங்கும்.

பால் இலேசாக ஜீரணமாகக் கூடியது. இது எல்லோருக்கும் தகுந்த அளவு கிடைக்காததால், பால் பெட்டி, பொடி முதலியவை, தயாரிக்கப் பட்டு இங்கு விற்பனைக்கு வருகின்றன.

பால் கொடுக்கிற ஜீவராசிகளை, சுத்தமான இடங்களில் கொட்டில்கள் அமைக்கப்பட்டு, காபந்து செய்யப்பட்டும், ஆரோக்கியமான நிலைமையில் இருக்கும்படி செய்தால்தான் அவைகளிலிருந்து வருகிற பாலும் சுத்தமான தாயும் உபயோகத்திற்கு லாயக்கானதாகவுமிருக்கும். கால் நடை வளர்ச்சி யில், எல்லோரும் சுகாதார முறைகளை கவனித்து கறவை மாடுகள் நல்ல தேகநிலைமையில் இருக்கும்படி செய்வது அவசியமாகும். சுத்தமில்லாத முறையில், பசுக்களிலிருந்து கறக்கிற பால் அசுத்தமாய் போனால் காசம் முதலிய நோய்களை உண்டாக்க ஹேதுவாகும். ஆகையால் மாடுகளின் மடி, கறவையில் ஈடுபடுகிறவர்கள், உள்பட சுகாதார முறைகளை விசுவாசத்துடன் கைக்கொண்டு, சுத்தமான பாலை, சப்ளை செய்வதில் பொறுப்பு, எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஸர்க்கார் பண்ணையைப் போல, அநேகம் பால் பண்ணைகள் டவுனிலும், கிராமங்களிலும் அமைக்கப்படவேண்டும். இதனால் பால் வருமானத்தை அதிகரிக்க முடியும். கால் நடை வளர்ச்சிக்குத் தகுந்த வசதிகள் இங்கு இருக்கின்றன. சிலர்தான் இதில் ஊக்கம் எடுத்திருக்கிறார்கள். இன்னும் கனதனவான்கள் கருணைபுரிந்து, பொதுஜன நன்மைக்காக முன்வரவேண் டும். இவர்கள், இருபிறப்பு, சிந்து, ஓங்கோல் ஜாதிகளில் நல்ல பசுக்களை வாங்கி, பண்ணை வைத்து பரிபாலித்து பால் சப்ளை செய்வது, புகழத்தக்க முறையாகும். சுருளி எருமைகள் வாங்கியும் பரிபாலிக்கலாம். எருமைப் பாலில், வெண்ணெ ஜாஸ்தியிருப்பதை உத்தேசித்து, நவீன முறையில், பச்சைப்பாலை கடைந்து, கிரீமும், வெண்ணெயில்லாத பாலும் (Skim milk) தயாரித்து விற்பனை செய்யலாம். (Cream) வெண்ணெயில்லாத பாலில் தேத்தண்ணீர் தயாரிக்கலாம். மலிவாக எல்லோருக்கும் கொடுக்கலாம்.

ஆசையுள்ளவர்கள், பசுமாடுகளை தாங்களே வீடுகளில் போஷித்து தங்களுக்கு வேண்டிய, பாலை, அடைவதும், மேன்மையாகும்.

பர்மாச் செய்திகள்.

1947-ம் வருஷத்திய சட்டங்கள்.

பர்மாக் குடியேற்ற (அவசரச்) சட்டம் 1947-ம் வருஷத்தியது (1947-ம் வருஷத்திய பர்மிய சட்டம் நம்பர் 31).

இந்தச் சட்டம் ஏற்பட ஓர் சரித்திரமிருக்கிறது. பர்மாவில் இந்தியர்கள் குடியேறுவது சம்பந்தமான பிரச்னைகளைக் கவனிக்க 1939-ம் வருஷத்தில் ஜுலை மாதத்தில் பாக்ஸ்டர் கமிஷன் நியமிக்கப்பட்டது. 1940-ம் வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் அந்தக் கமிஷன் ஓர் அறிக்கை வெளியிட்டது. அதன் மூலம் வெகுசீக்கிரத்தில் இந்தியா கவர்ன்மெண்டாருடன் ஓர் குடியேற்ற ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருந்தது. பிறகு 1941-ம் வருஷத்தில் இரண்டு நாடுகளுக்குள்ளும் ஸா-பாஜ்பாய் ஒப்பந்தம் என்று சொல்லப்பட்ட ஓர் ஒப்பந்தமேற்பட்டது. ஆனால் யுத்த காரணத்தால் அவ்வொப்பந்தம் அமுலுக்கு வாராமல் தடைப்பட்டது. பர்மிய அரசாங்கம் ஸிம்லாவில் இருக்கும்பொழுது நிர்வாக ரீதியாக ஓர் ஒப்பந்தம் நிறுவ இருதரப்பாரிடையே பேச்சு வார்த்தைகள் நடந்தன. இதற்குக் காரணம் ஸா-பாஜ்பாய் ஒப்பந்தம் இந்தியாவில் பெரும் அதிருப்தியை விளைவித்ததேதான். நிர்வாக ரீதியாக ஓர் ஒப்பந்தம் தொகுக்கப்பட்டதேயொழிய உண்மையில் ஏற்படவில்லை. பர்மா கவர்ன்மெண்டு தங்கள் நாடு திரும்பிச் சென்ற பிறகு அப்பொழுதிருந்த நிர்வாக சபை இக் குறிப்பைக் கவனித்ததில் அது பர்மியப் பொது மக்களுக்குத் திருப்தியளிக்கக் கூடியதில்லையென்றும் மேல் நடத்தாமல் விட்டு விடுவதென்றும் தீர்மானித்தது. பர்மாவைத் திரும்பி அடைந்தபொழுது அந்த அரசாங்கத்திற்கு பர்மியரல்லாதார் பிரச்னைகளையும், அகதிகள் பிரச்னைகளையும் கவனிக்க இடம் கொடுத்தது. நாட்டின் நிலவரமில்லாத நிலைமையால் அன்னியர்களை நாட்டில் வைத்துக்கொள்வதின் பிரச்னையும் பெரும் கவலைக்கிடமாயிருந்தது. இந்திய அகதிகள் நாடு திரும்புவதைக் கட்டுப்படுத்த இந்தியா கவர்ன்மெண்டாருடன் அவர்கள் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர். கப்பல் வசதியில்லாதிருந்த காலத்தில் இவ்விதக் கட்டுப்பாடு வெற்றியளித்தது. ஆனால் கப்பல்கள் போக்கு வரத்து ஏற்பட்டதின் பிறகு அந்நியர்கள் வருவதைத் தடுக்கும் கட்டுப்பாடு அந்த கவர்ன்மெண்டாருக்கு மிக்கக் கஷ்டத்தைக் கொடுத்தது. ஏனெனில் சட்ட ரீதியாகப் பர்மாவுக்குள் அந்நியர்கள் பெருவாரியாகக் குடியேறுவதைத் தடுக்கத் தக்க அதிகாரம் கவர்ன்மெண்டாருக்கில்லை. அவ்விதம் அந்நியர்கள் குடியேறுவதைத்தடுக்கவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

இச் சட்டம் உண்மையில் மிகக் கடுமையானது தான். கண்ட்ரோலரால் கொடுக்கப்பட்ட குடியேற்ற அனுமதிச் சீட்டில்லாமலோ, கவர்னராலோ

அல்லது அவர் அதிகாரம் பெற்றவர்களின் மேலொப்பம் பெற்ற அனுமதிச் சீட்டில்லாமலோ பர்மாவுக்குள் ஒருவரும் நுழையக்கூடாது. இந்த நிர்ப்பந்தம் ஐக்கிய நாடுகளிலுள்ள பிரிடிஷ் வாசிகளுக்கு அன்வயிக்காது. ஏனெனில் பர்மாவிலிருக்கும் பிரிடிஷ் வாசிகளுக்கு ஐக்கிய நாடுகளுக்குச் செல்ல நிர்ப்பந்தமில்லாதிருப்பதால் தான்.

பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வருகிறவர்களுக்கு திரும்பி அங்கு போகும் நோக்கத்துடன் வந்தால் எவ்விதம் அனுமதிச்சீட்டுப் பெறுவது என்பதைப்பற்றி ஓர் குறிப்பிட்ட விதியாவது வழியாவது சொல்லப்படவே இல்லை. தற்போது கட்டணமின்றி கொடுக்கப்படும் குறிப்பிட்ட மனுவின் மூலம் தான் அவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். ஓர் அனுமதிச் சீட்டிற்குக் கட்டணம் ரூ 3. மனுவுடன் புகைப்படங்கள் அனுப்பப்படவேண்டியது முக்கியம். ஆனால் கோஷா ஸ்திரீகளாகயிருந்தால் படம் அனுப்பவேண்டியதில்லை. அவர்கள், சம்பந்தப்பட்ட இலாகாவிலுள்ள ஸ்திரீ-உத்தியோகஸ்தர்களுடைய பரிசோதனைக்கு உட்படவேண்டும்.

உண்மைப் பர்மிய வாசிகளும், அங்கு வியாபாரத் தொடர்போ, குடும்பத் தொடர்போ உள்ளவர்களும், இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் முன்னால் தாத்காலிகமாக நாட்டை விட்டுச் சென்றவர்களும் பர்மாவுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்றால் கல்கத்தாவிலுள்ள, பர்மாவைச் சேர்ந்த குடியேற்ற உப-கண்ட்ரோலருக்கு நேரடியோ அல்லது யாராவதொரு இந்தியாவிலுள்ள குடியேற்ற இலாகா உத்தியோகஸ்தர் மூலமோ விண்ணப்பித்துக்கொண்டு நாடு திரும்பும் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். பர்மாவில் அவர்கள் இருப்பிடத்தைக் குறித்தும் தொடர்பைக் குறித்தும் சாக்ஷியம் விடவேண்டும். குடியேற்றக் கண்ட்ரோலராலும் பர்மாவிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியாலும் கொடுக்கப்படும் நாடு திரும்பும் அனுமதிச் சீட்டு சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படுமே தவிர அதுவே அவர்களின் இருப்பிடத்தைப்பற்றியும், வியாபாரத் தொடர்பைப் பற்றியும், குடும்பத் தொடர்பைப்பற்றியும், ருஜுப்படுத்தும் முடிவான சாக்ஷியமாகக் கருதப்படமாட்டாது. நாடு திரும்பும் அனுமதிச் சீட்டுப் பெற்றிருப்பவர்களுக்கு இந்தச் சட்டம் அன்வயிக்காது என்று ஓர் விளம்பரம் விடுத்திருக்கின்றனர். அவ்விதம் நாடு திரும்பும் அனுமதிச் சீட்டின் கட்டணம் ரூ 3. கல்கத்தாவிலுள்ள உப-கண்ட்ரோலருக்கு 31—10—47-வரை அவ்வித அனுமதிச் சீட்டுக் கொடுக்கலாம் என்று அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு அவ்வித அனுமதிச் சீட்டு பர்மாவில் ரங்கூனிலுள்ள குடியேற்றக் கண்ட்ரோலரால் தான் கொடுக்கப்படும். அந்தத் தேதிக்குப் பின் பர்மாவுக்குச் செல்பவர்கள் பிந்தி சொல்லிய உத்தியோகஸ்தரிடமிருந்தே அனுமதிச் சீட்டு பெற்றுக்கொண்டு செல்லவேண்டும்.

கெஜட்டுச் செய்திகள்

கட்டாயக்கல்வி—விஸ்தரிப்பு

1925-ம் ஹுத்திய VIII-வது ரெகுலேஷனுகிய புதுக்கோட்டை ஆரம்பக் கல்வி ரெகுலேஷனின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் 1-வது விதி (1)-வது உட்பிரிவின்படி கவர்ன்மெண்டார் இந்த ரெகுலேஷனின் விதிகள் 2-வது வட்டாரத்தில் அதாவது ரீவினியூ பிர்காக்களான திருமயம், செங்கிரை, கீழாநிலை இவைகளில் உடனேயே அமுலுக்கு வந்துவிடும் என்று உத்தரவிட்டிருக்கிறுர்கள்.

[ஸமஸ்தான கெஜட் 5—11—47, 1-வது பாகம்].

* * * *

சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரான ஸ்ரீ J. கோசல ராம நாயுடு ஸமஸ்தானத்தில் உத்தியோகம் ஏற்றுக்கொண்டுவிட்டதால் சட்ட சபையில் அவர் ஸ்தானத்திற்கு யோக்கியதையுள்ள ஓர் அங்கத்தினர் 15—2—48-க்குள் புதுக்கோட்டை நகர பொதுத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறுர்கள்.

[ஸ. கெ. 19—11—47, I பா].

* * * *

சமஸ்தான உணவு நிலைமையை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கு கவர்ன்மெண்டார் அவர்கள் ஜனப் G. சையத் அப்துல் ரஷீத் சாயபு அவர்களை உணவுப்பொருள் சேகரிப்பு உத்தியோகஸ்தராக நியமித்துள்ளார்கள். அன்னுருக்கு உணவுப்பொருள் சேகரிக்கும் இன்ஸ்பெக்டர்களுக்குள்ள அதிகாரங்களை அமுல் நடத்தவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[ஸ. கெ. 19—11—47 I பா].

* * * *

ஸமஸ்தானத்தில் அமுலிலிருந்துவரும் தொழிற்சாலைகள் சட்டப்படி (1943-ம் ஹுத்திய 20-வது ரெகுலேஷன்) லேபர் ஆபீஸரை ஸமஸ்தானம் பூராவுக்கும் தொழிற்சாலைகளின் பிரதம இன்ஸ்பெக்டராக கவர்ன்மெண்டார் நியமித்துள்ளார்கள்.

[ஸ. கெ. 19—11—47 I பா].

* * * *

ஸமஸ்தான பங்கீட்டு விதிகளின்படி தண்டனையடைந்தவர்கள் விபரம்.

ஆலங்குடி தாலூகா.

கிடாரம்பட்டி பிச்சமுத்து உடையார், பங்கீட்டை சட்ட விரோதமாக வாங்கியதற்கும், கையிருப்பு தானியம் தகவல் கொடுக்காமல் வைத்து இருந்ததற்கும் அபராதம் ரூ. 35.

கிடாரம்பட்டி முத்தப்புடையார் போதிய கையிருப்பு தானியமிருக்கையில் பங்கீட்டுச்சீட்டைப் பெற்று தானியம் வாங்கியதால் அபராதம் ரூ 35.

கிடாரம்பட்டி முத்தப்புடையார் தகவல் கொடுக்காமல் கையிருப்பு வைத்து இருந்ததற்கும் பங்கீடு பெற்றதற்கும் அபராதம் ரூ 30.

குளத்தூர் தாலூகா.

1. விராலிமலை வட்டாரம், தோகைமலை மாணிக்கம் செட்டியார் அரிசி ஏற்றுமதி செய்ததிற்காக ரூ 30 அபராதம். ஒரு மாதம் கடுங்காவல்.
2. குளத்தூர் தாலூகா கிள்ளுகோட்டை சங்கிலிமுத்து செட்டியார் (1) நெல் ஏற்றுமதி செய்ததிற்கும் (2) நெல் விற்பனைக்கும் (3) பரிசோதனை செய்யவந்த பங்கீட்டு இன்ஸ்பெக்டருக்கு இடங்கொடாது மறுதளித்ததிற்கும், ரூ 30 அபராதம் தவறினால் 30 நாள் கடுங்காவல்.
3. குளத்தூர் தாலூகா, ஊத்துக்குழி, பெருமாள் செட்டியார், நெல் விற்பனை செய்ததிற்கு ரூ 30 அபராதம். தவறினால் 15 நாள் கடுங்காவல்.

தையினிப்பட்டி பழனியப்ப செட்டியார் முன் அனுமதியின்றி அறுவடை செய்ததற்கு அபராதம் ரூ 30.

திருமயம் தாலூகா.

திருமயம் தாலூகா பனங்குடி காடப்பனம்பலம் மகன் ராமசாமி அம்பலம் அனுமதியின்றி நிலங்களில் அறுவடை செய்த திற்காக, ரூ 25 அபராதம். கடுங்காவல் 20 நாட்கள்.

அம்மன்குரிச்சி வட்டம் சொக்கனதைபட்டி ஆண்டியப்பன் ஆஜரில்லாத நபருக்கு பங்கீடு பெற்றதற்காக அபராதம் ரூ 35.

பூசத்துறை முருகன் மகன் சுப்பன் பர்மிட் இல்லாமல் அரிசி ஏற்றுமதி செய்ததிற்கு அபராதம் ரூ 50.
தவறினால் 15 நாள் கடுங்காவல்.

கேமத்தான்பட்டி P. L. A. அண்ணமலை செட்டியார் சர்க்காரில் எடுத்துக் கொண்ட தானியத்தை ஆஜர் படுத்தாததற்காக அபராதம் ரூ 100.

ஒலியமங்கலம் T. R. கிருஷ்ண சிங், சர்க்கரை பங்கீட்டுச் சீட்டில் பொய் யான குறிப்புகள் செய்ததிற்காக அபராதம் ரூ 30.

புதுக்கோட்டை டவுன்.

திருவப்பூர் ராமஸ்வாமி பங்கீட்டுச் சீட்டுக்குடைய நபர் இல்லாதிருக்கும் பொழுது அதை உபயோகப்படுத்தி துணியும் சர்க்கரையும் வாங்கிய தற்காக அபராதம் ரூ 5.

ஸ்ரீகிருஷ்ண பவன் ஹோட்டல் சொந்தக்காரர் கிருஷ்ண அய்யர் அரிசி மாவினால் இட்டலிகள் போட்டு விற்றதற்காக அபராதம் ரூ 15.

[வ. செ. 19—11—47, I பா].

ஸ்ரீ V. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தான் முதல் மந்திரி ஸ்தானத்தை ராஜீனுமா செய்ததை மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் 19—11—47 முதல் அங்கீகாரம் செய்துள்ளார்கள்.

[ஸ. கெ. 19—11—47—I பா].

* * * *

புதுக்கோட்டை ஸமஸ்தான மோட்டார் வாகனங்களின் இயந்திர பாகங்களின் கட்டுப்பாடு விதிகளில் சில திருத்தங்கள் 19—11—47உயுள்ள கெஜட்டில் முதலாவது பாகத்தின் அனுபந்ததில் ஈ தர்பார் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖ ❖

1—12—47உயிலிருந்து சர்க்கரையைப் பங்கீட்டுமுறைக் கட்டுப்பாட்டிலிருந்து கவர்ன்மெண்டார் விலக்கியுள்ளார்கள்.

❖ ❖ ❖ ❖

பருப்பு வகைகளை வியாபார நிமித்தம் வரவழைப்பவர்கள் சரக்குகள் வந்த ஒரு வாரத்திற்குள் எந்த வகைப் பருப்பு வரவழைக்கப்பட்டிருக்கிறதென்றும், எவ்வளவு வந்திருக்கிறதென்றும், விலைகளைப்பற்றியும் 5-A விதிகளின்படி ஓர் அறிக்கை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டுமென்று 1—12—47உ சமஸ்தான கெஜட் விசேஷ அனுபந்தத்தால் தெரிய வருகிறது.

❖ ❖ ❖ ❖

யுத்த சம்பந்தமான நஷ்ட ஈடுகளைப்பற்றிய மனுக்கள் இன்னும் வந்து கொண்டிருக்கிறபடியாலும், கண்ட்ரோலர் ஆபீஸை எடுத்துவிட எண்ணம் கொண்டிருப்பதாலும், காலம் கடந்து மனுக்கள் வந்தால் உண்மையில்லாது இருக்கலாமென்று எண்ணுவதாலும் ஷில்லாங், எமிகிரண்ட் லேபர் கண்ட்ரோலர் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மனுக்களை 1948-ம் வருஷம் ஜனவரிமீ 31-ம் தேதிக்குள் கொடுத்துவிடவேண்டுமென்று ஓர் அறிக்கை சமஸ்தான கெஜட் 3—12—47-ம் தேதியுள்ளதில் I-வது பாகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

❖ ❖ ❖ ❖

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் விற்பதைப்பற்றிய கண்ட்ரோல் ஆர்டர் 3—12—47உ சமஸ்தான கெஜட் I-வது பாகத்தின் அனுபந்தத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

❖ ❖ ❖ ❖

சமஸ்தானத்தில் G-பர்மிட் பெறாத மோட்டார் பஸ்கள் கலியாணப் பிரயுக்தமாயும், உல்லாசப் பிரயாணம் நிமித்தமும் சமஸ்தான ரோட் மூலம் ஒரே நாளில் பிரயாணம் செய்தால் அவைகளுக்கு கட்டணம் ரூ 10-ஆக விதித்திருக்கிறார்கள்.

புதுக்கோட்டை டவுன் ஸர்க்கார் விவசாய கால்நடைப் பண்ணை 1356-ம் பஸலி ரிபோர்ட்டு.

(By the Farm Manager.)

1356-ம் பஸலியில், ஸர்க்கார் பண்ணையிலும், டவுன் விதை டிப்போவிலும், செய்த அலுவல்களை அடியில் கூறுகிறேன்.

2. பண்ணையில், பஸலி பூராவும், சிப்பந்திகளில், மாறுதல் இல்லை. கீழ் டிவிஷன் விவசாய இன்ஸ்பெக்டர், பஸலி ஆரம்பத்தில், லீவில் இருந்தபொழுது அவர் வேலையும் சேர்த்துப் பார்க்கும்படி உத்தரவு செய்தபடி அஃதையும் கவனிக்கப்பட்டது.

3. **ஸ்திரமான சீர்திருத்தங்கள்.**—எல்லா கோழிக் கூண்டுகளுக்கு கல்கால்கள் ஊன்றி, வலை பாகத்தை சரிபார்த்து, திரும்பவும் அமைக்கப்பட்டன. தகரக் கொட்டகைக்கு, காபந்து செய்ய மூங்கில் பட்டையில் அடைப்பு தயாரிக்கப் பட்டது. பல்லவன் குளப்பொருக்கு அடித்து, பண்ணையின் வடபாகத்திலுள்ள புஞ்சைகளை மட்டப்படுத்தி மண்ணை நெல் வெள்ளாமை செய்ய தயாராக்கப்பட்டது.

4. வேலைகள்.—தோட்டப் பயிர்களின் சாகுபடிக்கு, ஆழமான புழுதியை எடுக்க. மண்ணை புறட்டி உழுகிற இரும்பு கலப்பையின், சௌகரியங்களை, காண்பித்தும், தரிசு நிலங்களை சீர்திருத்தும் முறைகளையும், மண், ஈரத்தை கிரகித்து வைத்துக்கொள்ளும் தன்மையை, அடைய, கவனிக்கவேண்டிய முறைகளையும், அறுத்தோடிகளை தடுக்கும் விதங்களையும், மாட்டு எரு சேகரம் செய்வதில் மூத்திரம் சேதப்படாமலும், சாணி, கழிபடுகிற வைக்கோல், குப்பை கூளங்கள் முதலியவைகளையும் சேகரித்து, எரு, பக்குவம் செய்யவேண்டியதையும், புறம் போக்குகளிலும் வேலி பக்கங்களிலும், விறகுக்கு லாயக்கான, விருக்ஷங்களை உற்பத்தி செய்யவேண்டியதைப்பற்றியும், நாட்டு காய்கறி, சீமை காய்கறிப் பயிர்களின் சாகுபடியையும், பழவகை விருக்ஷங்களின் சாகுபடியையும், பசுக்களை, சுகாதார முறையில் பரிபாலித்து, சுத்தமாக பால் கறவை செய்வதையும், கோழிகள், தேனீ வளர்ச்சியிலும் பொருக்கு விதைகளை பாவச் செய்வதிலும் பண்ணையின் கவனம் செலுத்தப்பட்டன.

5. காலம்.—டவுனில், பஸலியில், சுமார் 51 அங்குலம் பெய்ததாக, மழைக் கணக்கு தெரிவிக்கிறது, தென்மேற்கு பருவ மழை சாதகமாய் இல்லாததாலும், வடகிழக்கு மழை காலத்தில் ஆதியில் தகுந்தஅளவு பெய்யாததாலும், சம்பா நெல் பயிருக்கு சாதகமாக காணப்படவில்லை. பலர் முற்றின நாற்றை நடவேண்டிய தாயிற்று. குடிகளிடமும், விதைக் குறைவு ஏற்பட்டதுடன, வெளியூர்களில் கொடுப்பதாகச் சொன்ன நெல் விதை காலத்தில் வந்து சேராததாலும், உள்ளூரி லிருந்தவைகளை சோதித்து, அங்கங்கே குடிகளுக்கு சப்ளை செய்யப்பட்டன. வெளியூர் விதை வந்ததும், உடனுக்குடன், எல்லா மனுதார்களும் அடையும்படி நிறவிக் கொடுத்து கவனிக்கப்பட்டன. பூச்சி தொந்திரவினால் சில கிராமங்களில் சம்பா

வெள்ளாமை திருப்திகரமான மாசூலை கொடுக்கவில்லை. அதை எதிர்பார்த்து முன் கூட்டியே, சென்னை விவசாய இலாகாதாரை 1947-வருஷத்துக்கு நல்ல சம்பா விதைகள் சப்ளை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

6. **விஸ்தீர்ணம்.**—விஸ்தீர்ணத்தில் மாறுதல் இல்லை.

7. **பயிர்கள்.**—

நெல்.—மொத்த மழை அதிகமாயிருந்தபடியாலும் தாக்குகளில், ஜலம் நின்றபடியாலும், காய்கறிப் பயிர்களை குறைத்து நெல் வெள்ளாமை செய்யப் பட்டன. சம்பாவில் 4 மூட்டை நெல்லும், காரில் 47 படியும், குருவை நெல் 84 படி கண்டு முதல் கிடைத்தன; விதைக்கு லாயக்கில்லாத நெல்லை ஸர்க்கார் கோழிகளுக்கு தீவன மாக்கப்பட்டன.

கேப்பை.—இளம் தினுசு கேப்பை சாகுபடி நிரூபணம் செய்யப்பட்டது 30 படி கண்டு முதல் கிடைத்தது. கோழிகளுக்கு ஆகாரமாக உபயோகிக்க வேண்டியதாயிற்று. 2 படி விதை குடிகளுக்கு கொடுக்கப்பட்டன.

கிழங்கு பயிர்கள்.—சேனைக் கிழங்குப் பயிருக்கு மழை ஜாஸ்தியினால் தண்ணீர் பூரா வடியாமல், நின்றதின்பேரில், கிழங்குகள் பருமனில்லாமல் போய் விட்டன. 25 ராத்தல் விலைக்கு கொடுக்கப்பட்டன 210 ராத்தல் புதிதாகப் போட விதையாக பண்ணையில் உபயோகப்பட்டன.

மரவள்ளி.—வெள்ளை, கருப்பு இரண்டு தினுசுகள் சாகுபடி செய்யப்பட்டன. எல்லா குடிகளுக்கும், விரும்பியபடி குச்சிகள் இனமாக கொடுக்கப்பட்டன. கிழங்கு கிராக்கியுடன் விற்கப்பட்டன. மரவள்ளி சாகுபடி பரவிக்கொண்டு வருகிறது.

வாழை.—200 வாழைக் கன்றுகள் குடிகளுக்கு பண்ணையிலிருந்து சப்ளை செய்யப்பட்டன. வாழை மரங்களுக்கு கிராக்கி இருந்தன. ஆடுதுறைப் பண்ணையிலிருந்து புதிதாக வாழைக் கன்றுகள் பல தினுசுகளில் வாங்கி பயிராக்கப் பட்டன.

கரும்பு.—கால வசதிக் குறைவினால் கரும்பு சாகுபடியை நிறுத்தப்பட்டது, கொஞ்சம் மட்டும் மாதிரி பயிராக, பயிரிடப்பட்டது. ஆனால் குடிகள் Co. 281 கரும்பை விரிவாக சாகுபடி செய்து வெல்லம் காய்ச்சுவதில் பிரயாசை எடுத்துக் கொள்ளப்பட்டது. இது விஷயமாய் விரும்பின விவசாயிகளுக்கு, உதவி செய்யப் பட்டது. கரும்பு பயிருக்கு அமோனியம் ஸல்பேட் உரமும், புண்ணாக்கும் கலந்து உபயோகிக்கும்படி தூண்டப்பட்டன.

பரங்கி.—பரங்கி சாகுபடி செய்து, விதை எடுத்து, குடிகள், புறம்போக்கு களிலும், வீட்டுக் கொல்லைகளிலும், சாகுபடி செய்யும்படி, இனமாகவே கொடுக் கப்பட்டன. கண்காக்ஷிக்கு அம்மாசத்திரத்தில் நிறுத்திவைக்கப்பட்ட பழத் தையும், காலேஜ் பள்ளிக்கூட காக்ஷியில், எல்லோரும் பழத்தின் பருமனை தெரிந்துகொள்ள காட்டப்பட்டது. அந்தப் பழத்தின் விதையும் விரும்பினவர் களுக்கு திரும்பவும் பரவச் செய்யப்பட்டன.

சீமைத்தக்காளி.—காய்கறி சாகுபடியை, எல்லோரும் எங்கும் விரிவாக நடத்த, சீமை காய்கறி விதைகளை விலைக்கு வாங்கி, ஊக்கம் எடுத்துக்கொண்ட ஆபீஸர்களுக்கும், மிராசுதார்களுக்கும் கொடுத்து சாகுபடிமுறையையும் காட்டிக்கொடுப்பதில் உதவி செய்யப்பட்டன. நாத்துகள் உற்பத்தி செய்தும் கொடுக்கப்பட்டன. தக்காளி ஒவ்வொரு வீட்டிலும் உற்பத்தி செய்யப்படுகிறதென்றே சொல்லலாம். முட்டைகோஸ், பூக்கோஸ், பீட்ரூட், நூல்கோல் விதைகளும் பாக்கட் செய்து போதகர்களின் துவாராக விவசாயிகளுக்கும் தோட்ட சாகுபடிதார்களுக்கும் கொடுக்கப்பட்டன.

கூடமுளகாய்.—உரப்பில்லாத தித்திப்பு குடமுளகாய் சாகுபடி செய்ததில் எல்லாரும், மாசூலை, விரும்பினார்கள். விதைப்பழம், நிறுத்தி இதன் சாகுபடி பரவச்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

முள்ளங்கி.—வழக்கம்போல் சில்லரை தோட்டக்காரர்களின் உபயோகத்திற்கு பங்களூர் விதை வாங்கி விலைக்கு கொடுக்கப்பட்டது. சிகப்பு இருசு முள்ளங்கியும் எங்கும் பரவும்படி விதை கொடுக்கப்பட்டது.

தீவனப்பயிர்கள்.—முத்துச்சோளம், கினியாப்புல், ஆனைப்புல் முதலியவை தீவனப் பயிர்களுக்காக சாகுபடி செய்யப்பட்டன. சாக்கடை தண்ணீரில், ஏற்படுகிற கழிவு, தீவனப்பயிர்களுக்கு, நல்ல, உரமாகுமென்பதை குடிகளுக்கு சொல்லப்பட்டது. வழக்கம்போல், 1,000 கினியாப்புல், 750 ஆனைப்புல், விதைத்தண்டுகள் பஸலியில் கிராமவாசிகளுக்கு சாகுபடி செய்வதற்கு இனமாக கொடுக்கப்பட்டன.

கனிவர்க்கப்பகுதி.—இரண்டு வகை பப்ளிமாஸ், எலுமிச்சை, கிடாரை சப்போடில்லா முதலிய பழ விருக்ஷங்களின் பராமரிப்பு காட்டப்பட்டன. பஸலி ஆரம்பத்தில் காய்ச்சலினால், மரங்கள் வளர்ச்சியில் தடைப்பட்டன. வறட்சி தாங்காது நுனிக்கிளைகள் காய்ந்து, பட்டன. நல்லவேளை, பின் மழை சௌகரியமாய் ஏற்பட்டதும், அவைகள் வளர்ச்சிபெற சாதகமாயிற்று. மா, கிடாரை, கொடி எலுமிச்சை, விருக்ஷங்களுக்கு பொருத்தமான கால வசதிகள் இல்லை. ராஜகோபாலபுரம், லக்ஷ்மிபுரம் தோப்புகள், நன்கு, பரிபாலிக்கப்பட்டன. விறகுக்கு லாயக்கான செடிகளை வேலி ஓரங்களில் நடலாமென்பதையும், அதற்கு பொருத்தமான செடிகள் எவை என்பதையும், பாரத்தில் நிரூபித்து காட்டப்பட்டன.

கால்நடைப்பகுதி.—மாட்டு தொழுவத்தின் அமைப்பும், பசுக்களை போஷிக்க வேண்டிய முறையும், பால் கறவை, விற்பனை முதலியதை சுகாதார முறைகளை நழுவவிடாமல், நடத்துவதை காட்டப்பட்டன. ஊக்கமுள்ள சில கனவான்களும் தனிமையில் பால் பண்ணை ஸ்தாபித்து பால் சப்ளை செய்து வருவதும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. வீட்டுவாசல்களிலும் சிலர் பசுவைக் கொண்டுவந்து கறந்து கொடுக்கிறார்கள். பண்ணையில், சிந்து, இருபிறப்பு, நாட்டு ஜாதி, பசுக்கள் போஷிக்கப்பட்டு வருகின்றன. பஸலியில் 15 பசுக்கள் ஈன்றன. 10 கிடாரியும், 5 காளைகன்றுகளும் கொடுத்தன. ஒரு காளைக்கன்று இறந்துவிட்டது. 3 பசுக்கள்

விற்கப்பட்டன. ஒன்று கன்றுடன் கொடுக்கப்பட்டது. ஊக்கமுள்ளவர்களுக்கு 7 காளைக்கன்றும், 4 கிடாரிக்கன்றும் உத்திரவின்பேரில் விற்கப்பட்டன. கலியாணம் என்ற பொலிகாளை, வயதானபடியால் விற்கப்பட்டது.

14,753 புதுக்கோட்டைபடி பால் வருமானம் கிடைத்தது. இந்த பஸலியில் நல்ல அரிசித்தவுடும், கடலை உமியும் கிடைக்காததால் போன பஸலியைக் காட்டிலும், இந்த வருமானம் குறைவு அடைந்தது. பால் விற்பனையில் ரூ. 5,350—9—2 கிடைத்தது. பால் 1—2—47 முதல் ரூபாய்க்கு $2\frac{1}{2}$ படி விகிதம் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

அடியில் குறிப்பிட்டிருக்கிறபடி, கால் நடை, பஸலியில் பண்ணையில் போஷிக்கப்பட்டன.

1356—பஸலி.

1. கலியாணம்—காளை—16—7—46-ல் விற்கப்பட்டன.

2.	தர்மன்—கிடா	... 1
3.	சிந்து பசுக்கள்	... 11
4.	இருபிறப்பு இங்கிலீஷ் பசுக்கள்.	... 4

கால்நடைப்பகுதி.

5.	நாட்டு பசுக்கள்	... 2
6.	ஊட்டு மறந்த கன்றுகள்	... 16
7.	ஊட்டுக் கன்றுகள்	... 12
8.	உழவு மாடுகள்	... 4
9.	ஊசிமலை—காளை	... 1
10.	மதுரம் ,,	... 1
11.	நந்தி ,,	... 1
12.	கிரே ,,	... 1

பொலிமாடுகள்.—அடியில் குறிப்பிட்டிருக்கிற அட்டவணை பொலிமாடுகளின், உபயோகத்தை தெளிவாகக்காட்டும்.

1.	கலியாணம்	...	... 5
2.	ஊசிமலை	...	... 80
3.	மதுரம்	...	... 63
4.	நந்தி	...	... 69
5.	கிரே	...	... 61
6.	தர்மன்	...	... 114

கோழிப்பண்ணை.—வெள்ளை லெக்கான், ரோட்அயிலெண்ட் ரெட், என்ற இரண்டு ஜாதி கோழிகள் தான் வளர்க்கப்பட்டன. முட்டை வருமானம், விற்பனை அடியில்கண்ட அட்டவணையில் காட்டப்படுகின்றன.

			விற்பனை.					
ஆரம்பத்தில் இருப்பு.	வருமானம்.	மொத்தம்.	அடை.	சாப்பாடு.	குஞ்சு பொரிக்க.	குஞ்சுக்கு ஜோடி.	பாக்கி	ஆதார.
11	1429	1440	785	589	18	48	...	...

தேனீவளர்த்தல்.—பண்ணையில் நாலும், ஆனந்தபாக் தோப்பில் ஒன்பதும் தேன்கூடுகள் வைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. ஈ-திவான் பங்களாவில், இரண்டும், ரெஸிடன்ஸியில் ஒன்றும், பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. ரோஸ்லாண்டு பங்களாவில் இருந்த தேனிக்கூட்டங்களுக்கு, மெழுகு பூச்சியின் தொந்திரவினால் கெடுதல் ஏற்பட்டன. ஆனந்த பாக்கில் $28\frac{1}{2}$ ராத்தலும், பாரத்தில் 10 ராத்தலும், தேன், இப் பஸலியில் கிடைத்தன. ஸ்ரீமான் தேவநேசனும் தேனீ வளர்ப்பை, Mission High School இடத்திலும், மச்சுவாடி தோப்பிலும், நிரூபணம் செய்து காட்டியும், தேன் எடுத்து, பவுண்டு ரூ 2 வீதம் விற்பனை செய்துவருகிறார். இந்த கைத்தொழிலை கிராமங்களில் அபிவிருத்தி செய்ய அவர் பிரயாசைப்படுகிறார்.

தேனீக்கள் வளர்ச்சியில், உற்சாகம் காட்டுகிற கனவான்களுக்கு பண்ணையிலிருந்தும், கூடுமான, உதவி, கொடுக்கப்பட்டு வருகிறது.

விதை டேப்போ.—மெட்ராஸ் விவசாய டிபார்ட்மெண்டு, கால பிற்பாடாய், அனுப்பிய 3400 நெல், கேப்பை விதை மூட்டைகளை இங்கு குடிகளுக்கு சப்ளை செய்யப்பட்டன. நூத்துக்கு முக்கால்வாசி குடிகளுக்கு, கிடைத்த விதையை, பங்கிட்டு கொடுக்கப்பட்டன. அநேகர் விதை கால தாமதமாக சப்ளை செய்யப்பட்டதென்றும், போதுமான அளவு, கொடுக்கப்படவில்லை என்றும் அபிப்பிராயப் பட்டார்கள். அதற்கு காரணம் சென்னை ராஜதானியில், போனஸ் முறை தொடங்கியதும், விதை நெல், எல்லாம் சாப்பாட்டுக்கு விற்பனையாய் விட்டபடியாலும், எதிர்பார்த்தபடி விதை அனுப்ப முடியாமல் போயிற்று. ஈ-திவான் பேஷ்கார் அவர்கள் உள்ளூரில் எந்த இடங்களில் விதை கிடைக்குமோ, அந்த ஊர்களில் அதை நிறுத்திவைக்கச் செய்து அங்கேயே குடிகளை வாங்கிக்கொள்ளும்படி உத்திரவு செய்து கால தாமதமின்றியில் சப்ளையை ஏற்பாடு செய்தார். ஆகையால், பாரம் கிப்பந்திகள், சுமார் ரூ 40,010—15—10 பொறுமானமுள்ள நெல், கேப்பை, விதைகள் வாங்கி ஸ்டாக் செய்து சப்ளை செய்திருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். 1000 நாட்டு கலப்பை கொழுக்கள் ஸ்டாக் செய்து குடிகளுக்கும் விவசாய சங்கங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. செங்கல்பட்டு சிறுமணியம், சில இடங்களில் பொருத்தமாகவே, காணப்பட்டன. Co, 7, சடைச்சம்பா விதை

தினுசுகளும், புலன் கொடுத்தன. ஆனால், ஆடுதுரை குறுவை திருப்திகரமான மாசூலை இந்த பட்டத்தில் கொடுக்கவில்லை என்று குடிகள் தெரிவித்தார்கள்.

விஸிட்டர்.—192 குடிகள் பண்ணைக்கு வந்து காய்கறி விதைகள் பெற்றும், விவசாய விஷயங்களைப்பற்றியும் தெரிந்து கொண்டார்கள்.

அறுத்தோடிகளைத்தடுக்க ஏற்பாடுகள்.—Giantstar, புல் விதைகளை D. P. W. அதிகாரிகள், குளக்கரையிலே, நாத்தங்கால் தயார் செய்து, அபிவிருத்தி செய்வதில், ஈடுபட்டதினால் பண்ணையிலிருந்து ஜாஸ்தி புல், விதை எடுத்துக்கொள்ளவில்லை. புதிதாக இரண்டு தினுசு புல் விதைகள், வந்ததை சோதனை செய்யப்பட்டு வருகின்றன. பொருத்தமாக காணப்பட்டால் எங்கும் பரவச்செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

விறகுக்கு லாயக்கான மரங்களை செயற்கை முறையில் காடுகளில் உற்பத்தி செய்தல்.

டவுன் கஸ்பா கிழ்புறமுள்ள காட்டில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வருஷம், கால வசதிகள் சௌகரியமாக இருந்தன. இடிந்து போன காலி இடங்களில் திரும்பவும் விதை போடப்பட்டன. இதுவரையில் ஆயிரம் உசிலைகன்றும், வரிசையாக உற்பத்தி செய்யப்பட்டன. இடவெளியில் தானாக உற்பத்தியடைந்த 300 செடிகளையும் கெடுதியடையாமல் கவனிக்கப்பட்டன. வேலா, சிதை, உடைவேலா, மரங்களும் உற்பத்தி செய்ததில் 340, செடிகள் நல்ல வளர்ச்சியை அடைந்தன. சீமைக்கருவேல் இனத்தில் 200 செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆரம்பத்தில் இந்த செடி படர்ந்து வளர்கிறது. காய்ச்சலை தாங்கக்கூடியதாகத் தெரிகிறது. 1947-ம் ஞு ஆகஸ்டு மாதம்முதல் இந்த இடத்தில் செடிகளுக்கு கெடுதல் ஏற்படாமலிருக்க பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட காவல் தேவையில்லை என்று நிறுத்தப்பட்டது. காட்டு இலாகா சிப்பந்திகளின் பார்வைக்கு இந்த ஜாகா மாற்றப்பட்டது.

1356-ம் பஸலியின் பண்ணை வரவு செலவு கணக்கு.

அட்டவணை.

Expenditure (செலவு விபரம்).

		ரூ.	அ.	ப.
1.	காயமான உத்தியோகஸ்தர் சம்பளம் வகையரா.	2696	11	6
2.	கண்டின்ஜென்ஸி	684	0	6
	மொத்தம் ...	3380	12	0

நடப்புச் செலவு.

		ரூ.	அ.	ப.
1.	கால் நடை சம்ரக்ஷணை	10198	0	10
2.	கோழிகள் ,, ...	410	6	3
3.	விதை	26	0	0

			ரூ.	அ.	பை.
4.	பயிர் செய் கோர்த்தி ...	...	75	0	9
5.	டிபார்ட்மெண்டு செலவு ...	...	190	9	6
6.	பண்ணையாட்கள் சம்பளம் ...	...	2953	9	3
7.	கால்நடை கோழி வாங்கின வகையில்.				
	மொத்தம்	...	13853	10	7

Receipts (வருமானம்).

			ரூ.	அ.	ப.
1.	தோட்ட ஆதாயம் ...	...	424	3	0
2.	பொலி வருமானம் ...	...	359	0	0
3.	விதை (பாரம்) ...	...	7	4	0
4.	இதர வருமானம் ...	...	456	13	9
5.	பால் ...	...	5060	7	0
6.	முட்டை & கோழிகள் ...	...	289	14	0
7.	மாடு ...	...	918	0	0
	மொத்தம்	...	7519	9	9

மற்ற பத்திரிகைக் குறிப்புகள்.

அகதிகளுக்கு இனாமாக அனுப்பும் துணிகளுக்கு போஸ்டு கட்டணமில்லை.

அடியில்கண்ட விலாஸத்திற்கு, அகதிகளின் உபயோகத்திற்கு தானம் செய்யப்படும் துணிகளின் மூட்டைகளுக்கு 400 தோலா எடைக்குக் கீழாகயிருந்தால் போஸ்டு கட்டணமோ, ரிஜிஸ்திரேஷன் கட்டணமோ கிடையாது. ஆனால் அவ்வித மூட்டைகளின்பேரில் "அகதிகளின் கஷ்ட நிவாரணத்திற்காக இனாமாக அனுப்பப்படும் துணிகள் மூட்டை" என்று எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்விதம் கட்டணமின்றி 1948-ம வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிவரை அனுப்பப்படலாம்.

விலாஸம்.

Chairman,

Collection of Clothes and Work Parties' Sub-Committee,

Lady Irwin College,

New Delhi.

[இந்தியச் செய்தி, மலர் 21, இதழ் 216.

அலுமினியப் பாத்திர உபயோகம்.

பாத்திரங்கள் சமையல் செய்வதற்கும், சமைத்த பதார்த்தங்களை சேமித்து வைப்பதற்கும் இன்றியமையாதது. இருந்தாலும் சமையல் பாத்திரங்கள நமது ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாயிருக்கிறது என்பதை ஜனங்கள் மறந்துவிடக்கூடும்.

இந்த மாகாணத்தில் சமையல் செய்வதற்கும், சமைத்த உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவும் அலுமினியம் பாத்திரங்கள் பெருவாரியாக உபயோகப்பட்டு வருகிறது. அப்பாத்திரங்களில் ஜனங்களுக்கு ஓர்வித மோஹம் அதனுடைய வெள்ளி போன்ற ஒரு பளபளப்பாலும், கனமின்மையாலும் மற்ற பாத்திரங்களைவிட விலை மலிவாகயிருப்பதனுலும் இருக்கலாம். இந்தியாவிலும், பிற நாடுகளிலும் இது சம்பந்தமாகச் செய்த பரிசோதனையில் சில உணவுப் பதார்த்தங்கள் முக்கியமாக புளியும், உப்பும் கலந்து செய்யப்பட்டவைகளான சாம்பார், ரஸம் போன்றவைகளை அலுமினியம் பாத்திரத்தில் வைப்பதால் அப்பாத்திரத்திலுள்ள கலப்பு மூலப்பொருள்கள் அப்பதார்த்தங்களில் அதிகமாகக் கலந்துவிடுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் கலப்பதால் அப்பதார்த் தங்களை உபயோகிப்பவர்களில் அநேகருக்கு தேக ஆரோக்கியத்தில் உபத்திரவம் ஏற்படாவிடினும் முடிந்தவரையில் அப்பாத்திரங்களை உணவுப் பதார்த்தங்களில் புழங்குவதைக் குறைக்கவேண்டும்.

சண்டையில் இயந்திரங்கள் முதலியவைகளில் உபயோகப்படுத்தப் பட்டதும் ஆகாய விமானத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதுமாயுள்ள அலுமினியத்தைக்கொண்டு வார்க்கப்பட்ட பாத்திரங்களில் சமையல் செய்வதைப்பற்றியும் உணவுப்பதார்த்தங்களை அதில் வைத்திருத்தல் பற்றியும் எச்சரிக்கவேண்டியது முக்கியமாகயிருக்கிறது. ஐக்கிய நாடுகளிலிருந்து சமீபத்தில் கிடைத்துள்ள செய்திகளால் அப்பாத்திரங்களைப் புழங்குவது தேக ஆரோக்கியத்திற்கு மிக்க கெடுதல் விளைவிக்கும் என்று தெரிகிறது. அவ்வித அலுமினியத்தில் செயற்கைப் பொருள்களாயுள்ள நிக்கல், செம்பு, இரும்பு, காரீயம் இவைகள் சரியான முறையில் கலப்பு இல்லாமலிருப்பதால் மனித ஆரோக்கியத்திற்கு பெரும் தீங்கு விளைவிக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அலுமினியப் பாத்திர உற்பத்தியாளர்கள் நல்ல ரக அலுமினியத்தையே பாத்திரங்கள் செய்ய பொறுக்கியெடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் பொதுஜனங்களுக்கும் அலுமினியம் பாத்திரம் வாங்கும்

வியாபாரியிடமிருந்து அது நல்ல ரக அலுமினியத்தைச் சேர்ந்ததுதானு என்ற உத்திரவாதம் பெற உரிமையுண்டு.

[மதராஸ் செய்தி, மலர் 1, இதழ் 24.

கடிதங்களுக்கு பதில்.

ஸமஸ்தான காங்கிரஸின் ஆதரவில் நடந்த முதலாவது வருஷத்திய மகாநாட்டைப்பற்றி விடுத்துள்ள செய்தியில் பிழையிருப்பதாக எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த மகாநாட்டுத் திறப்பாளர் ஸ்ரீ சா. கணேசன் என்றும், தலைமை வகித்தது ஸமஸ்தான காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ. V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் M. A., B. L, M. L. C. என்றும் தெரிய வருகிறது. அதனல் 15—11—47 வெளிவந்த "புதுக் கோட்டைச் செய்தியில்" ஸ்ரீ சா. கணேசன் தலைமை வகித்தார் என்று சொல்லப்பட்டிருக்கும் குறிப்பு சரியல்ல. இந்தப் பிசகிற்கு நாங்கள் விசனிக்கிறோம்.

காந்தி ஜெயந்தி விழாவை ஒட்டி வெளியிட்டிருக்கும் குறிப்பில் மற்ற சங்கங்களோடு ஸமஸ்தான காங்கிரஸையும் சேர்த்துச் சொல்லப்படவில்லை யென்பது எங்களுக்கு ஞாபகமூட்டப்பட்டது. ஸமஸ்தானத்தில் இவ் விழாவையொட்டிய விஸ்தாரமான குறிப்பு 15—10—47உ யுள்ள "புதுக்கோட்டைச் செய்தியில்" வெளியிடப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் மாலை நகரிலுள்ள பல சங்கங்களால் சேர்ந்து நடத்தப்பட்ட மாபெரும் ஊர்வலத்தைப்பற்றியும், அதையடுத்து மதுரை ஸ்ரீ A. வைத்தினுத அய்யர் அவர்கள் தலைமையில் திலகர் மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தைப்பற்றியும் குறிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ A. வைத்தினுத அய்யர் சென்ற பிறகு ஸ்ரீ V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் தலைமைவகித்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்விதம் அன்னர் தலைமை வகித்ததை கவனக் குறைவால் விடப்பட்டது. இந்தப் பிசகிற்கும் நாங்கள் வருந்துகிறோம்.

—ஆசிரியர்.

சட்டசபை விஷயங்கள்.

புதுக்கோட்டை சட்ட நிர்மாண சபை 52-வது விதியின்படி 1946—47-ம் வருஷத்திற்கு திருத்த திட்டத்திற்குமேல் உபரியாக ஏற்பட்ட செலவைக் காட்டக்கூடிய ஸ்டேட்மெண்டு நிதி மெம்பரால் கொடுக்கப்பட்டது.

1356-ம் பஸலியில் (1946—47) கீழ்கண்ட தலைப்புகளில் ரூ. 7,677 உபரிச் செலவு ஏற்பட்டது.

		ரூ.
கிராண்டு V & XVIII—அரசாங்க நிர்வாகம்	...	2,134
கிராண்டு VII & XX—ஜெயில்கள்	...	5,543
உபரி	...	7,677

1. அரசாங்க நிர்வாகம்.—

		ரூ.
திருத்த திட்டக் கணக்கு	...	60,060
நிலைத்த செலவு	...	62,194
உபரி	...	2,134

இந்த உபரி முக்கியமாய் 'ஸ்ரீ-தர்பார் அவர்கள் ஆபீஸ்—கரெஸ்பாண்டென்ஸ் பிராஞ்சு & சட்ட நிர்மாண சபை—கண்டின்ஜென்ஸீஸ்' என்ற இனத்தில் ஏற்பட்டது. ஸைகிள்கள் வாங்கினதும் இன்னும் சில அயிட்டங்களில் உபரிச் செலவும், எலெக்ஷன் மனுக்களை விசாரிக்க நியமித்த கமிஷனர்களுக்குக்கொடுத்த வெகுமானமும் இதற்கு காரணமாகும்.

2. ஜெயில்கள்.—

		ரூ.
திருத்த திட்டக் கணக்கு	...	82,820
நிலைத்த செலவு	...	88,363
உபரி	...	5,543

இந்த உபரி முக்கியமாய் 'ஸெண்ட்ரல் ஜெயில்—கைதிகளுக்கு உணவு' என்ற இனத்தில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தால் ஏற்பட்டது.

சட்ட சபைக்கு சமர்ப்பித்த அறிவிப்பு.

I.

புதுக்கோட்டை சட்ட சபை ஸ்டாண்டிங் ஆர்டர் 5(2) பிரகாம், செய்யப்பட்ட ரிப்போர்ட்டு.

சட்ட சபை ரெகுலேஷன் 14-வது செக்ஷனை ஒத்து மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்களுடைய சம்மதியைப் பெற்ற ரெகுலேஷன்கள்.

தொடர்ச்சி நம்பர்.	ரெகுலேஷனின் பெயரும், நம்பரும்.	அதற்குச் சரியான பில்லின் நம்பர்.	சம்மதியைப் பெற்ற தேதி.
1	புதுக்கோட்டை பொதுஜன சுகாதார ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய IV-வது ரெகுலேஷன்).	1946-ம் வருஷத்திய 8-ம் ந. பில்.	12—4—47.
2	புதுக்கோட்டை கிராம பரிஷ்கார (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய V-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 1-ம் ந. பில்.	12—4—47.
3	புதுக்கோட்டை கிராம பஞ்சாயத்து (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய VIII-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 2-ம் ந. பில்.	12—4—47.
4	புதுக்கோட்டை ஆரம்பக்கல்வி (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய VI-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 3-ம் ந. பில்.	12—4—47.
5	புதுக்கோட்டை மோட்டார் வாகனங்கள் (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய IX-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 4-ம் ந. பில்.	12—4—47.
6	புதுக்கோட்டை ரெவின்யூ பாக்கி வசூல் (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய VII-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 5-ம் ந. பில்.	12—4—47.
7	புதுக்கோட்டை இன்ஸால்வன்ஸி (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய XIII-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 7-ம் ந. பில்.	22—4—47.
8	புதுக்கோட்டை கிராம பஞ்சாயத்து (இரண்டாவது திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய XII-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 11-ம் ந. பில்.	22—4—47
9	புதுக்கோட்டை வர்த்தகக்குறிகள் ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய X-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 12-ம் ந. பில்.	22—4—47.
10	புதுக்கோட்டை முனிசிபாலிடிகள் (திருத்தப்பாடு) ரெகுலேஷன் (1947-ம் வருஷத்திய XI-வது ரெகுலேஷன்).	1947-ம் வருஷத்திய 13-ம் ந. பில்.	22—4—47.

II

சட்ட சபையின் ஏழாவது சபையின் இரண்டாவது கூட்டத்தில் கவர்ன்மெண்டார் கவனிப்பதாகச் சொன்ன விஷயங்களும், அவைகளின் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் அடங்கிய ஜாபிதா.

வரிசை நெ.	சட்ட சபை நடவடிக்கையின் கேள்வி அல்லது தீர்மானம் அல்லது மற்ற பிரமேயம்.	கவனிப்பதாகச் சொன்ன விஷயம்.	எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள்.
1	வினு 17(40)—டவுன் ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர்களின் சங்கியையை அதிகரிக்க வேண்டுமாய் Mr. V. அருணசலத் தேவர் கேட்டார்.	ஈ-தர்பார் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள்.	1—7—47 முதல் ஆஸ்பத்திரிக்கு உபரியாக இரண்டு கம்பவுண்டர்களை ஈ-தர்பாரவர்கள் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.
2	வினு 30(60)—நார்த்தாமலை கோயில் பிரகாரத்தில் ஒரு கிணற்றைத் தோண்டவேண்டுமென்று Mr. A. S. ஆறுமுகம் செட்டியார் சொன்னார்.	விஷயத்தைக் கவனிப்பதாக ஈ-தர்பாரவர்கள் சொன்னார்கள்.	பிராகாரத்திலுள்ள கிணற்றைத்தோண்ட அவசியமிருக்கிறதென்று ஈ-தர்பார் அவர்கள் கருதவில்லை.
3	வினு 85(63)—குடுமியாமலையில் பஸ்கள் இருவழியாகச செல்லவேண்டுமென்று Mr. A. S. ஆறுமுகம் செட்டியார் சொன்னார்.	விஷயத்தைக் கவனிப்பதாக ஈ-தர்பாரவர்கள் சொன்னார்கள்.	பஸ்கள் இருவழியாகச் செல்லவேண்டிய தவசியமென்று ஈ-தர்பார் அவர்கள் கருதவில்லை.

வரிசை ந.	சட்ட சபை நடவடிக்கையின் கேள்வி அல்லது தீர்மானம் அல்லது மற்ற பிரமேயம்.	கவனிப்பதாகச் சொன்ன விஷயம்.	எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள்.
4	வெட்டுப் பிரேரணை 18(113)—தெய்வாசல் குளக்கரையில் செல்லும் ரஸ்தாவை அகலப்படுத்தவேண்டுமென்று Mr. V. ஷண்முகம் செட்டியார் கேட்டார்.	ரஸ்தாவைப் பார்வையிட்டு ஆவன செய்வதாக அக்கிராசனர் சொன்னார்.	பார்வையிட்டபின் இந்த வேலைக்கு ஒரு எஸ்டிமேட் தயாரித்தனுப்பும்படி ஸ்டேட் இன்ஜினியருக்கு ரா-தர்பார் அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். எஸ்டிமேட் வரப்பெற்றபின் ரஸ்தாவை அகலப்படுத்துவதைப்பற்றி அவர்கள் முடிவு செய்வார்கள்.
5	வெட்டுப் பிரேரணை 62(81)—இரண்டணு லேபிள்களில் பெயர் எழுதவேண்டாமென்று Mr. M. Kr. Rm. ராமஸ்வாமி செட்டியார் சொன்னார்.	இது விஷயத்தைக் கவனிப்பதாக முதல் கவுன்ஸிலர் சொன்னார்.	வாங்குகிறவன் பெயரை எழுதவேண்டிய தவசியமில்லையென்று ரா-தர்பார் அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள்.
6	வெட்டுப் பிரேரணை 69(12)—சிப்பந்தி வேலையாட்களுக்கும் பூராச் சம்பளத்துடன் ரஜா கொடுக்கவேண்டுமென்று Mr. A. S. ஆறுமுகம் செட்டியார் கோரினார்.	பிரச்னையைக் கவனிப்பதாக ரா-தர்பார் அவர்கள் சொன்னார்கள்.	மதராஸ் மாகாண விதிகளை ஒட்டி ஸமஸ்தான ரஜா விதிகளும் யுக்தமாகத் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன.

Sri Brihadamba State Press, Pudukkottai, 850—15-12-47.

வந்தேமாதரம் !

ஜெய் ஹிந்த் !!

RAJA SOAP WORKS PUDUKKOTTAI

Raja Soap Works

நாகரீக உலகத்தில் மங்கையும், மகனும்

விரும்புவது தூய ஆடை

(காரணம்)

“ சுத்தம் சோறுபோடும்

சுத்தமே சுகம் தரும் ”

அச்சுத்தமே

கடவுளுக்கு அடுத்தபடி மதிக்கவேண்டிய விஷயமும் ஆகும்.

❖

இவைகளைப் பூர்த்திசெய்வது

“ ராஜா சோப் ஒர்க்ஸின் ”

“ கங்கை பார் சோப்புகள் ”

818 கீழ ராஜவிதி, புதுக்கோட்டை.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.